Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Religious Cults Based on Fear in Sangam Literature

**Dr. A. P. Maheshwari,** Assistant Professor of Tamil, Aditanar College, Tiruchendur.
ORCiD: https://orcid.org/0000-0002-1688-925X
DOI: 10.5281/zenodo.7312870

## Abstract

*During the Sangam period, the people of the Sangam period lived their lives in harmony with nature and destroyed the forest and burned it for agriculture. Due to this many changes were taking place in the economy. Thus distinct social structures emerged in the ethnic group. They tried to rule over nature. The overwhelming powers of nature were an unfathomable wonder. It was tragic that people died because of it. To protect himself from such nature he tried to establish a relationship with nature and himself. Knowing that mystical energy was driving everything, he performed mantras, rituals and sacrifices to control it. Thinking that they can control the mystical energies through these rituals, they divided their living lands into five types and worshipped the deities of their respective lands. It is such mystical powers that have developed into religions in modern times. This article examines the "Ettuthogai" and "Ten Idylls" of the Sangam Literature based on these ideas.*

**Keywords:** Sangam Literature, Fear, Religious Cults.

## References

[1] Dr. A. Pandurangan. Society Literature (Religion, Worship, Government, Society).
[2] Sangam Literature Patupatha Volume-1, Volume-2.
[3] *Akananooru*, Kalituyanai Naira Puliurgasikan text.
[4] Fourteen hundred. Maniidai Pavalam Nithila Kowai.
[5] Corporation Publication, Street. P.W. Somasundaran Padaurai, Explanation.
[6] Prologue, Society publication, textbooks written by A. Narayanasamy Iyer.
[7] *Kurundogai* - Sangha Literary Volume – 1, 2 Lecturer, Dr. V. Nagarasan.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்க இலக்கியங்களில் அச்சம் சார்ந்த சமய வழிபாட்டு முறைகள்

முனைவர் ஆ. பெ. மகேஸ்வரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.
ORCiD: https://orcid.org/0000-0002-1688-925X
DOI: 10.5281/zenodo.7312870

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க காலத்தில் சங்க கால மக்கள் தங்கள் வாழ்க்கையை இயற்கையுடன் இணைந்து வாழும் போது காட்டை அழித்து அதனை எரித்து வேளாண்மை செய்தனர். கால்நடை வளர்த்தனர். இதன் காரணமாக பொருளாதாரத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இதனால் இனக்குழுவில் தனித்துவமான சமூக அமைப்புகள் உருவாகின. அவர்கள் இயற்கை மீது ஆளுகை செலுத்த முயன்றனர். இயற்கையின் அதீவித ஆற்றல்கள் புரிந்திட முடியாத பேராற்றலாக இருந்தது. இதனால் மனிதர்கள் மரணித்தது பேரதிர்ச்சியாக இருந்தது. இத்தகைய இயற்கையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயற்கைக்கும் தங்களுக்கும் உறவினை ஏற்படுத்த முயன்றான். ஒரு மாய ஆற்றல் எல்லாவற்றையும் இயக்குவதாக அறிந்து அதனைக் கட்டுப்படுத்த மந்திரம், சடங்குகள், பலிகள் செய்து வழிபட்டான். இச்சடங்குகள் மூலம் மாய ஆற்றல்களை கட்டுப்படுத்தலாம் என எண்ணி தங்கள் வாழும் நிலங்களை ஐவகையாகப் பிரித்து அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்களை வழிபட்டான். இத்தகைய மாய ஆற்றல்கள்தான் தற்காலத்தில் சமயங்களாக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்தக் கருத்துக்களை முன்னிறுத்தி சங்க நூலான எட்டுத்தொகை, பத்துப்பாட்டுகளில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச் சொற்கள்:** சங்க இலக்கியம், அச்சம், சமய வழிபாட்டு முறைகள்.

## முன்னுரை

தோன்றிய முதல் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்றுள்ளது என எண்ணினான். இவ்வகையில் சங்க காலத்தில் வாழ்ந்த சங்க மக்களும் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்த சூழ்நிலையில் இயற்கையுடன் ஒரு உறவை ஏற்படுத்தி வாழத் தொடங்கினான். ஆனால் இவ்வியற்கை தன்னிலையிலிருந்து மாறும்போது தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயற்கையைக் கடவுளாக அச்சம் கருதி வழிபட வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவே தான் சங்க மக்கள் ஐந்திணை நிலப்பரப்பில் மலை, மலைமுகடுகள், சுனைகள், அருவிகள், கடற்கரை அடர்ந்த காடுகள், இரவும், தன் கண்களுக்கு புலப்படாத இடங்களில் அணங்கு, சூர், சூரா மகளிர் போன்ற ஏதோ ஒரு சக்தி வாய்ந்த் ஆற்றல் உறைந்திருப்பதாக எண்ணி வழிபட்டதை சங்க நூல்களில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சமயம்**

சமயம் என்றால் மனிதரைச் சமைப்பது அல்லது பக்குவப்படுத்துவது எனப் பொருள்படும். மனிதனை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் கருவியாக சமயம் பயன்படுகிறது. சமயம் என்ற சொல் "நெறி, கொள்கை, மதம்" என்று பல பொருள்களை தமிழகராதி கூறுகிறது.

**தொல்காப்பியத்தில் சமயம்**

சங்க இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைக்கக்கூடிய இலக்கண நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பியத்தில் செய்யுளியலில் கருப்பொருளினைப் பற்றிக் கூறும்போது,

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியோடு தொகை**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்.பொருள்., 964)**

தெய்வத்தை தொல்காப்பியர் முதன்மைப்படுத்திக் கூறியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும்,

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவறை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும் (தொல்.பொருள்., 951)**

என்ற நூற்பாவில் அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்களைப் பற்றி தொல்காப்பியர் கூறுகிறார். இத்தெய்வங்களைக் கருப்பொருளுடன் இணைத்து சங்க இலக்கியத்தில் கூறியுள்ளதை காண முடிகிறது.

**அணங்கு**

தமிழர்களுக்குரிய தொன்மையான வழிபாட்டில் இடம்பெறும் அணங்கு என்னும் தெய்வம், மக்களை அச்சுறுத்தும் தெய்வமாக நம்பப்பட்டது. இத்தெய்வம் காடுகளிலும், நீர்நிலைகளிலும் உறைவதாகத் தமிழ் மக்கள் எண்ணினர்.

**கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்**
**மஞ்சை ஆலும் மரம்பயில் இரும (பெரும்., 493-495)**

என்ற பாடலில் இனிய தாளத்துடன் கின்னரம், மிதுனங்கள் கின்னரியாழை மீட்ட அதற்கேற்றபடி மரங்கள் அடர்ந்த சோலையில் மயில்கள் நடனமாடும் அங்கே அச்சுறுத்தும் அணங்கு என்ற தெய்வம் இருந்தமையை இப்பாடல் உணர்த்துவதைக் காண முடிகிறது. மதுரைக் காஞ்சியிலும்,

**அணங்கு வீழ்வு அன்ன பூங்கொடி மகளிர் (மதுரை., 446)**

அணங்கு என்ற தெய்வம் இருந்ததைக் கூறுகிறது. மேலும்,

***ஆஅய் நல் நாட்டு அணங்குடைச்***

***தென்திசையில் ஆளும் அரசன் சிலம்பில்* (அகம்., 198:14)**

இப்பாடலில் ஆய் என்ற மன்னனின் நாட்டிலுள்ள காட்டில் அணங்கு வாழ்ந்ததை அகநானூறு கூறுகிறது. ஆக அணங்கு தெய்வம் நீர்நிலைகளில் வாழக்கூடியது என்றும், மக்களுக்கு அச்சத்தைத் தரக்கூடியதாக இருந்தது என்று மேலே உள்ள பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

**சூர்**

அணங்கைப் போன்றே மக்களுக்கு அச்சம் தரும் தெய்வம் “சூர்” எனப்படுகிறது. மலைநாட்டில் சூர்த் தெய்வங்கள் இருப்பதால் அவ்வழியே செல்லும் மக்களுக்கு அவை துன்பம் விளைவிக்கும் என்று குறிஞ்சிப் பாட்டு,

**… வெஞ்சினத்து**
**உருமும், சூரும், இரைதேர் அரவமும் (குறி., 254,255)**

கூறுவதைக் காண முடிகிறது. மேலும் சூர் தெய்வங்கள் இருக்கும் மலைகளிலுள்ள இலை, தலைகளை, தீண்டினாலும் அவர்களுக்கு துன்பத்தைத் தரும் என்றும், மலையிலுள்ள வரையாடுகள் கூட அங்குள்ள தழைகளைத் தின்னாமல் ஒதுங்கிச் செல்லும் என்பதை

**போருடை வருடையும் பாயாச்**
**சூருடை அடுக்கத்த கொயற்கருந் தழையே (நற்., 359:8-9)**

இப்பாடல் வழி காண முடிகிறது. ஆக சூர்த் தெய்வம் மக்களை அச்சுறுத்தும் என சங்க மக்கள் எண்ணினர் என்பதை மேலே கூறிய சங்கப் பாடல்களிலிருந்து அறிய முடிகிறது.

**சூரர மகளிர்**

மலைகளிலும், மலைச் சாரல்களிலும் தெய்வ மகளிர் உறைவதாகச் சங்க மக்கள் எண்ணினர். தலைவன் தலைவியின் கையைப் பற்றிச் சூள் உரைக்கும் போது சூரர மகளிர் மேல் ஆணையிட்டு கூறியதை, “நின்னை விரைவில் மணந்து கொள்வேன்” (குறுந்., 53:5-7) குறுந்தொகை உணர்த்துகிறது. மலர்கள் பூத்துக் குலுங்கும் சுனையில் சூர் மகள் வாழ்வதை,

**ஏர் மலர் நிறை சுனை உறையும்**
**மகள் மாதோ என்னும் என் நெஞ்சே (அகம்., 198:16-17)**

இப்பாடலில் தலைவன் தலைவியைப் பார்த்து சூர் மகளிர் தான் வந்து விட்டாளோ என எண்ணி தன் நெஞ்சி திண்டாடியதை அகநானூறு வரிகள் மூலம் புலனாகிறது. மேலும், கடவுள் தன்மை வாய்ந்த சூரர மகளிர் மலையிலுள்ள சுனையின் அருகில் குருதிக் காந்தள் மலர்களை ஒன்றாக கட்டி சூடி, அருவியின் ஓசையை இனிய வாச்சமாகக் கொண்டு நடனம் ஆடியதை,

**கடவுட் கற்சுனை அடையிறந் தவிழ்ந்த**
**பறியாக் குவளை மலரொடு காந்தள்**
**குருதி யொண்பூ உருகெழக் கட்டிப்**
**பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்**
**அருவி யின்னியத் தாடு நாடன் (நற்., 340:1-5)**

நற்றிணைப் பாடல் கூறியதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு சூரர மகளிர் மலைகளிலுள்ள சுனையில் வாழ்ந்து வந்ததையும் தலைவன் தலைவியிடம் ஆணையிட்டு கூறுவதற்கு சூரர மகளிரைப் பயன்படுத்தியுள்ளான் என சங்கப் பாடல்கள் வழி தெரிந்து கொள்ள முடிகிறது.

**கொல்லிப் பாவை**

கொல்லிப் பாவை சேர மன்னனுக்குரிய கொல்லி மலையில் அமைந்திருந்தது என்று கூறுவர். இப்பாவை தெய்வத்தால் நிரூபிக்கப்பட்டது என்று கூறுவர். பூமி நடுங்கினாலும், கொல்லிப் பாவை அழியாமல் இருக்கும் என்று சங்க மக்கள் எண்ணினார். கொல்லிப் பாவை பேரழகு வாய்ந்தது என்று சங்கப் பாடல்கள் கூறுகிறது. அப்பாவை தீயோருக்கு அச்சம் தரக்கூடியது என்றும் தலைவியின் பேரழகுக்கு ஒப்புமையாகக் கொல்லிப் பாவையைச் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். இக்கொல்லிப்பாவைப் பற்றி

**பெரும்பூட் பொறையன் பேஎழுதிர் கொல்லிக்**
**கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய**
**நல்லியற் பாவை யன்னவிம் (குறுந்., 89:5-7)**

குறுந்தொகை கூறும்போது சேரனுக்குரிய அச்சம் தரும் கொல்லி மலையில் கரிய கண்களையுடைய பாவை போன்ற தெய்வம் இருந்தமையைக் கூறுகிறது. மேலும் காரி என்ற வள்ளல் சேர மன்னனுக்கு உரிமையுடைய கொல்லி மலையை ஓரி என்ற மன்னனைக் கொன்று மீட்டுக் கொடுத்தான். அம்மலையில் தேவர்களால் உருவாக்கப்பட்டதும், உலகில் பலராலும் புகழப்பட்ட தெய்வமாகிய பாவை இருந்ததை,

**...சேரலர்க் கீத்த**
**செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி**
**நிலைபெறு கடவுளாக்கிய**
**பலர்புகழ் பாவை யன்னநின் னவனே (அகம்., 209:14-17, ப. 283)**

அகநானூற்றுப் பாடல் வழி புலனாகிறது. கொல்லிப் பாவையின் உருவத்தை புடைப்போவியமாக பொறிக்கப்பட்டதை,

**செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி**
**நிலைபெறு கடவுளது ஆக்கிய (அகம் 62:12-16)**

இப்பாடல் கூறுகிறது. எனவே கொல்லிப் பாவை பேரரழகு வாய்ந்தது என்றும், தீமை செய்வோருக்கு அச்சத்தை விளைவிக்கும் தெய்வம் என்றும் மேலே உள்ள செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

சங்க காலத்தில் சங்க மக்கள் அச்சத்தை தரக்கூடிய இடங்களில் தெய்வம் உறைந்திருப்பாகக் கருதி வழிபட்டனர். மேலும் அத்தெய்வம் பேரழகு வாய்ந்தது என்றும் கரிய கண்களையுடையது என்றும் கூறியுள்ளதை சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. சங்க

மக்கள் இத்தெய்வங்கள் மேல் ஆணையிட்டு கூறியுள்ளதையும், தெய்வங்கள் பாறைகளில் புடைப்போவியமாக தீட்டியதையும் அறிய முடிகிறது. இத்தெய்வங்களிலிருந்து தான் பிற்காலத்தில் சமய வளர்ச்சி பெற்றதை கூறலாம்.

**பார்வை நூல்கள்**

[1] சங்க இலக்கியம் (சமயம், வழிபாடு, அரசு, சமூகம்) முனைவர் அ.பாண்டுரங்கன்.

[2] சங்க இலக்கியம் பத்துபாட்டு தொகுதி-1, தொகுதி-2.

[3] அகநானூறு, களிற்றுயானை நிரை புலியூர்கேசிகன் உரை.

[4] *அகநானூறு*. மணியிடை பவளம் நித்திலக் கோவை, கழக வெளியீடு, தெரு.பொ.வே. சோமசுந்தரனார் பதவுரை, விளக்கவுரை.

[5] *நற்றிணை* உரை, கழக வெளியீடு, அ.நாராயணசாமி ஐயர் உரை.

6] *குறுந்தொகை- சங்க இலக்கிய தொகுதி– 1, 2,* (உரை) முனைவர் வி.நாகராசன்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.